**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவின் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுகளின் ஊடாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் பல்கலைக்கழகம்

தொடர்ந்தியங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல், அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சுயவருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,
- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானங்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுக் நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துடனான தொடர்புடன் கூடிய இணங்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீள்பரிசீலனை செய்யப்படாததால் கிரயம் ரூபா 1,253,598,110 ஆன நிலையான சொத்துக்கள் முற்றாக தேய்விடப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டன. அதன் பிரகாரமான மதிப்பீட்டு தவறை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 பிரகாரம் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலையான சொத்து பதிவேடொன்றை தயாரிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதனை தயாரித்த பின்னர் இவ்வனைத்து தவறுகளையும் அகற்ற இயலுமை காணப்படுவதாக. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 426,000,000 ஆன மூலதன மானியம் தொடர்பாக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணல் மற்றும் அளவையிடல் மேற்கொள்ளப்படவில்லை. | எதிர் காலத்தில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | -மேற்படி- |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 103 பந்தி பிரகாரம் கற்புலனாகா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீள்பரிசீலனை செய்யப்படாததால் கிரயம் ரூபா 13,327,143 ஆன கற்புலனாகா சொத்துக்கள் முற்றாக தேய்விடப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டன. அதன் பிரகாரமான மதிப்பீட்டு தவறை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 பிரகாரம் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலையான சொத்து பதிவேடொன்றை தயாரிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதனை தயாரித்த பின்னர் இவ்வனைத்து தவறுகளையும் அகற்ற இயலுமை காணப்படுவதாக. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் பணிக்கொடை ஏற்பாடு ரூபா 514,666,493 ஆனபோதும், பணிக்கொடை கணக்கிடும் பேரேட்டு பட்டியலின் பிரகாரம் அது ரூபா 601,158,480 ஆனது. 2019 ஆண்டு கல்விசார் ஆளணிக்காக கற்கை படிகள் மற்றும் கல்விசாரா ஆளணிக்காக பதிலீட்டு படிகளை உள்ளடக்கி பணிக்கொடை கணக்கிட்டு கணக்கீடு செய்கையில் ஏற்பட்டிருந்த ரூபா 86,491,987 ஆன குறை ஒதுக்கீட்டை 2021 திசெம்பர் 31 திகதி வரையும் சரிசெய்திருக்கவில்லை. | இவ்வித்தியாசத்தை சீராக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | இத் தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் சுய உற்பத்தி நிதி செயற்பாட்டின் மூலம் கிடைத்திருந்த ரூபா 73,414,154 இனை மீளாய்வாண்டின் | சுய உற்பத்தி நிதி செயற்பாட்டின் மூலம் கிடைத்த மேலதிக வருமானத்தை எதிர்காலத்தில் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வருமனமாக இனங்காண வேண்டிய போதும், அதற்குப் பதிலாக அவற்றின் ரூபா 36,425,658 மாத்திரம் மீளாய்வாண்டு வருமானமாக இனங்காணப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 36,988,496 இனை நேரடியாக அபிவிருத்தி நிதிய கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 36,988,496 இனால் குறைத்து காட்டப்பட்டது. | மூலதன மாற்றல் கூற்றினூடாக சீராக்க நடவடிக்கை எடுப்பதாக. | |
| (இ) | மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம், சமூக விஞ்ஞான மற்றும் மொழிப் பீட கருத்தரங்கு கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்க பொறிலியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய மதியுரை செயலணிக்கு 2021 திசெம்பர் 31 திகதி வரையும் ரூபா 20,860,844 செலுத்த வேண்டியிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அதற்காக ஏற்பாடு செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் தேவையான சீராக்கங்களை செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் ரூபா 47,851,166 இனை கட்டிடக் கணக்கிலிருந்து அகற்றி கடன்கொடுனர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட போதும் அதற்குறிய ஜர்னல் குறிப்பை தயாரித்திருக்காததால் அக்கொடுக்கல் வாங்கல் இனங்காண மற்றும் பரிசோதிக்க முடியவில்லை. | இக் கட்டிட பெறுமதியை அகற்ற ஜர்னல் வவுசர் தயாரிக்கப்படாத போதும் கணக்கீட்டு தொகுதியினுள் அங்கீகாரத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதாக. | கொடுக்கல் வாங்கல்களை இனங்காண மற்றும் பரிசோதிக்க தேவையான ஜர்னல் வவுசர் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | முகாமைத்துவ மற்றும் சமூகவிஞ்ஞான பீடத்தின் நிர்மாணமொன்றிற்காக 2019 ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 9,953,442 தொகையை முடிவடையா வேளைகள் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டிய போதும் அதற்குப் பதிலாக கட்டிடக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021 திசெம்பர் 31 திகதியன்று கட்டிடங்கள் கணக்கு அதற்கு சமமான பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டதுடன் 2019, 2020 மற்றும் 2021 எனும் 03 ஆண்டுகளிற்காக கட்டிட தேய்மானம் ரூபா 1,493,016 | நிதி பிரிவினால் ரூபா 9,953,442 தொகை செலுத்தப்பட்டுள்ளதாக மற்றும் அதன் போது நிர்மாணத்தை பயன்படுத்தியதனால் முடிவடையா வேலைகள் கணக்கிலிருந்து கட்டிடக் கணக்கிற்கு மாற்றியதாக. | முடிவடையா வேளைகள் மற்றும் முடிவடைந்த வேளைகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2016 மார்ச் 01 ஆம் திகதி வெளியிட்டிருந்த இலக்கம் 4/2016 கொண்ட சுற்றறிக்கையின் 5.5 பந்தி பிரகாரம் பல்கலைக்கழக சுய உற்பத்தி நிதி செயற்பாடுகளிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கருத்திட்ட கணக்கு, நிதி செயலாற்றுகை கூற்றில் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், தொடர்புடைய சுற்றறிக்கையின் 5.5.2 பந்தி பிரகாரம் ஆண்டிறுதியில் நிதியத்திற்கான பங்களிப்பு, மூலதன மாற்றல் கூற்றினூடாக நிதி செயலாற்றல் கூற்றிலிருந்து நிதி நிலைமை கூற்றிற்கு மாற்றப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுய உற்பத்தி நிதி செயற்பாடுகளிற்காக தயாரிக்கப்பட்ட கருத்திட்ட கணக்குகளை எதிர்காலத்தில் பல்கலைக்கழக கணக்குகளுடன் இணைப்பொன்றாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாடு கணக்கு அல்லது அறிக்கை**

| | விடயம் | நிதிக்கூற்று பிரகார பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகார பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | பீடத்தின் 03 கட்டிடங்களை நிர்மாணிக்க பொறியியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய மதியுரை செயலணிக்கு செலுத்த வேண்டிய பணம் | 40,289,882 | - | 40,289,882 | மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவு மற்றும் பொறிலியல் செற்பாடுகள் தொடர்பாக மத்திய மதியுரை செயலணியிடம் விசாரித்து அப் பணத்தை செலுத்துவதற்கு இல்லை எனில் எதிர்காலத்தில் குறித்த சீராக்கத்தை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரதான நூலக கட்டிட நிர்மாண வேலைகளின் முடிவடையா வேளைப் பெறுமதி | 48,882,099 | 75,503,800 | 26,621,701 | மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவினால் அந்த அந்த கருத்திட்டத்திற்காக ஒப்பந்ததாரருக்கு மேற்கொண்ட கொடுப்பனவுகளை மாத்திரம் முடிவடையா | முடிவடையா வேலைப் பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | வேலை பெறுமதியாக இனங்கண்டுள்ளதாக மற்றும் கருத்திட்டத்திற்காக மேற்கொண்ட அனைத்து செலவுகளையும் முடிவடையா வேலையாக நிதிக்கூற்றினுள் இனங்கண்டுள்ளதாக. | |
| (இ) | தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டிய அட்டுறு செலவு | 1,647,000 | - | 1,647,000 | இது தொடர்பாக மேலும் பரிசோதித்து எதிர்காலத்தில் சரிசெய்வதாக. | பொறுப்புகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மைதானம் மற்றும் பூகோல விஞ்ஞான பீடத்தை நிர்மாணிப்பதற்காக பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய மதியுரை செயலணிக்கு செலுத்த வேண்டிய மீதி | 14,700,327 | 11,569,096 | 3,131,231 | இது தொடர்பாக மேலும் பரிசோதித்து எதிர்காலத்தில் சரிசெய்வதாக. | பொறுப்புகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | ஆண்கள் விடுதியை நிர்மாணிக்க பொறியியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய மதியுரை செயலணிக்கு செலுத்த வேண்டிய மீதி. | 7,486,262 | 10,807,708 | 3,321,446 | -மேற்படி- | -மேற்படி- |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நானாவித வைப்புக் கணக்கு | 1,168,125 | விரிவான அட்டவணைகள் | நானாவித வைப்புக்களிற்குறியதாக 2021 ஆண்டு முதல் கணக்கு பிரிவினால் | நானாவித வைப்புக் கணக்கில் காணப்படும் மீதிகளை இனங்காணக் கூடிய வகையில் அட்டவணைகளை |

| | |
|---|---|
| அட்டவணையொன்று பேணிச் செல்வதாக. | முறையாக பேணிச் செல்ல வேண்டும். |

**1.6 பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 ஆண்டுகள் முதல் 21 ஆண்டுகள் வரையான காலமொன்றாக நிலவிவரும் 07 ஊழியர்களின் ரூபா 439,429 ஆன இடர் கடன், கணனிக் கடன், வாகனக் கடன், ஊழியர் கடன் மற்றும் விழா முற்பண 12 கடன் மீதிகளை 2021 திசெம்பர் 31 திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணி ஒப்பந்த மீறல் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்ததனால் அறிவிட முடியாதுள்ளதாக. | கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டு முதல் மஹபொல பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டியதாகவுள்ள ரூபா 2,201,150 இனை மீளாய்வாண்டிலும் தீர்த்திருக்கவில்லை. | மஹபொல பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,201,150 இனை எதிர்காலத்தில் தீர்ப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது வியாபார பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி | நிதியமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் நிறுவனத்தில் காணப்படும் மேலதிக பணம் முதலீடு செய்யப்பட முடியுமான போதும், அவ்வாறான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டினுள் ரூபா 116,660,274 இனை 08 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | பல்கலைக்கழத்தின் மேலதிக நிதியம் நிலையான வைப்புக்களில் மூதலீடு செய்யப்படவில்லை என மற்றும் பல்கலைக்கழக நிதிக் குழு கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் நிலையான வைப்புக்களில் தற்காலிக அடிப்படையில் நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளதாக. | சிதிச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(5) | வழங்கப்படும் நிமித்த கட்டுநிதி குறித்த செயற்பாட்டை பூர்த்தி செய்தவுடனே தீர்க்க வேண்டிய போதும், 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 32 சந்தர்ப்பங்களில் 23 அலுவலர்கள் மற்றும் 06 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கருத்திட்ட, மீண்டெழும், மூலதன மற்றும் ஆராய்ச்சி முற்பணம் ரூபா 6,743,084 தொகையை 2021 திசெம்பர் 31 திகதி வரையும் தீர்த்திருக்கவில்லை. | இவ்வாண்டு முதல் தீர்க்கப்படாத முற்பணம், பெற்றுக் கொள்ளும் நபரின் சம்பளத்திலிருந்து அறவிடும் சான்றிதழ் ஒன்றை முற்பண விண்ணப்பத்துடன் பெற்றுக் கொள்வதாக மற்றும் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப்பகுதிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 16,686,382 ஆன நிறுத்தற் பணத்தை உரிய தரப்பினர்களிடம் விசாரித்து அரச வருமானத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. | இந்த நிறுத்தப் பணத்தை உரிய தரப்பினர்களுக்கு செலுத்த பல்கலைக்கழகம் பொறுப்பாகவுள்ளதால் முடிவுருத்த முடியாததாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பந்தி | 2000 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்றிருந்த 11 அலுவலர்களிடமிருந்து பிணைமுறிகள் மீறப்பட்டமை காரணமாக அறவிட வேண்டிய ரூபா 50,516,467 தொகை 2022 மார்ச் 31 வரை அறவிட இயலாதிருந்தது. | மூன்று அலுவலரிடமிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 28,079,397 இனை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க குறித்த ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக. | பல்கலைக்கழக தாபன வதிக் கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 72,767,750 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 100,763,338 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 173,531,088 தொகையான வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவுகள் ரூபா 216,393,885 தொகையினால் அதிகரிததிருந்த போதும் மீண்டெழும் அன்பளிப்பு ரூபா 297,500,000 இனால் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 28,697,543 இனால் அதிகரித்திருந்தமை இவ்வளர்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வ்

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்து பதிவேட்டிற்காக மென்பொருலொன்றை அமைக்க ரூபா 400,000 உம், அம்மென்பொருனிற்கு தரவுகளை உள்ளீடு செய்து சொத்து பதிவேட்டை தயாரிக்க ரூபா 968,300 உம் 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை கூட்டுத் தொகை ரூபா 1,370.300 இனை 08 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் 2021 திசெம்பர் 31 திகதிக்கு கிரயம் ரூபா 6,614,202,769 ஆன ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு 2022 மே 30 திகதியளவிலும் தயாரித்திருக்கவில்லை. | காணி கட்டிடங்கள் உள்ளிட்ட அனைத்து நிலையான சொத்துக்களையும் பௌதீக ரீதியாக ஒப்பாய்வு செய்து மதிப்பிட்டு கணனிமயப்படுத்தி நிலையான சொத்து பதிவேடொன்றை தயாரிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலையான சொத்து பதிவேட்டை தயாரிக்கும் நடவடிக்கையை துரிதமா நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2014 ஆண்டில் ரூபா 123,052,693 செலவில் நிர்மாணித்திருந்த பல்கலைக்கழகத்தின் மைதானம் மற்றும் விளையாட்டரங்கில் காணப்பட்ட குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு 2017 ஆகஸ்ட் 09 திகதி கட்டளையிட்டிருந்த போதும் ரூபா 5,156,160 ஆன நிறுத்தற் பணத்தை பயன்படுத்தி மைதானத்தை திருத்த 2022 மே 30 திகதி வரை நடவடிகையை எடுத்திருக்கவில்லை. | மைதானத்தை நிர்மாணித்த பொறியியல் செயற்பாடு தொடர்பான மத்திய மதியுரை செயலணியுடன் கலந்துரையாடியதாக, அவர்கள் உரிய முறையில மற்றும் திருப்திகரமாக வேலைகளை பூர்த்தி செய்து 2012 ஏப்ரல் 30 திகதி மைதானத்தை மற்றும் விளையாட்டரங்கை பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைத்ததாக மற்றும் 2013 ஏப்ரல் 30 திகதியுடன் பராமரிப்பு கால எல்லையும் முடிவடைந்துள்ளதாக அறிவித்துள்ளதாக, அவ்வாறே அவர்களின் நிறுத்தற் பணம் மற்றும் இறுதி பட்டியலை பயன்படுத்தி மூன்றாம் | பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தரப்பினரூடாக நடவடிக்கை எடுப்பது நீதியல்லாததால் அவ்விறுதி பட்டியல் மற்றும் நிறுத்தற் பணத்தை அவர்களுக்கு செலுத்துமாறு மற்றும் அவ்வாறு செய்யாவிடில் ஒப்பந்த பிரகாரம் நடவடிக்கை எடுக்க நேரிடுவதாக அறிவித்துள்ளதாக. | |
| (இ) | சுவீடன் கோதம்பர்க் (University of Gothenburg) பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திட்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலத்தினுள் மானியமாக கிடைத்திருந்த ரூபா 5,434,801 இலிருந்து ரூபா 1,676,970 தொகை 03 ஆண்டு காலமாக குறை பயன்பாட்டுடன் நிலவியது. | தற்போது குறித்த பணத்தை பயன்படுத்த வேண்டிய முறை தொடர்பாக கூட்டிணைப்பாளரினால் நிதிப் பிரிவிற்கு எழுத்து மூலம் அறிவூட்டியுள்ளதாக மற்றும் அதன் பிரகாரம் நிதிக் குழுவின் பரிந்துரை மற்றும் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் கீழ் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | கிடைத்துள்ள பணத்தை விளைவுள்ளதாக மற்றும் முறையாக பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2016 ஜுன் மாதம் ரூபா 15,964,000 செலவில் கொள்வனவு செய்திருந்த Desktop 130 கணனி இயந்திரங்கள் உரிய அளவுத் திட்டத்திற்கு இணங்காமை தொடர்பாக பரிசோதிக்க 2018 பெப்ரவரி மாதத்திலும் மூவரை கொண்ட பரிசோதனை சபையொன்று நயமிக்கப்பட்டிருந்தது. 2018 மே 19 ஆம் திகதிய பரிசோதனை சபை அறிக்கை பிரகாரம் மொத்த பெறுகைகள் நடவடிக்கையினுள் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டிருந்த அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரைத்திருந்த போதும் 2022 ஏப்ரல் 30 திகதி வரையிலும் ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் 2018 ஜுன் 21 திகதி ரூபா 1,596,400 ஆன நிறுத்தற் பணமும் ஒப்பந்தக்தாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | குழு தீர்மானத்தின் மீது நிறுத்தற் பணத்தை விடுவித்ததாக, 2022 ஜனவரி 24 திகதி இடம்பெற்ற 280 ஆவது கட்டுப்பாட்டு சபை தீர்மானத்தின் பிரகாரம் குறித்த ஏனைய செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளதாக, அதன் பிரகாரம் நிர்வாக மற்றும் நிதிபிரமாணம் தொடர்பாக நிர்வாக ஆளணியை அறிவூட்டும் இரண்டு நாள் செயலமர்வொன்று மற்றும் பெறுகைகள் செயற்பாடுகள் தொடர்பான கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியை அறிவூட்டும் வேலைத் திட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளதாக. | பெறுகைகள் செயன்முறையினுள் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டுள்ள அலுவலர்கள் தொடர்பாக பரிசோதனை குழுவின் பரிந்துரை பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டப்பின்படிப்பு தகைமையை நிறைவு செய்வதற்காக சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை பெற்று 2012 ஆண்டு | அவ் அலுவலர்கள் பட்டப்பின்படிப்பு தகைமையை பூர்த்தி | ஒப்பந்த நிபந்தனைகளிற்கு அமைய |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 2017 ஆண்டு வரை காலப்பகுதியினுள் வெளிநாடு சென்ற 05 அலுவலர்கள் கற்கை செயற்பாடுகளை பூர்த்தி செய்யாது மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டிருந்ததுடன், 2022 பெப்ரவரி மாதம் வரையிலும் பட்டப்பின்படிப்பு தகைமையை பூர்த்த செயதிருக்கவில்லை. அவ் அலுவலர்கள் கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு செல்லும் போது பல்கலைக்கழகத்துடன் செய்திருந்த ஒப்பந்தத்தின் 19 ஆவது பிரிவின் பிரகாரம், கற்கை செயற்பாட்டை கைவிடுதல் அல்லது உரிய காலத்தினுள் பூர்த்தி செய்யாத காரணத்தால் கற்கை செயற்பாடுகளிற்காக மேற்கொண்ட அனைத்து செலவுகளையும் அறவிட வேண்டிய போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ரூபா 42,853,450 பெறுமதியான பிணைமுறியினை 2021 திசெம்பர் 31 திகதி வரையும் அறவிட இயலாதிருந்தது. | செய்யாவிட்டால் கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனையின் மீது ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | நடவடிககை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக கல்விசாரா ஆளணியிற்குறிய 13 அலுவலர்களுக்கு 2020 ஜனவரி முதல் 2021 ஒக்டோபர் வரையான காலத்தினுள் ஆராய்ச்சி படியாக கூட்டுத் தொகை ரூபா 6,081,025 செலுத்தியிருந்த போதும், படிகளை பெற்ற எந்த அலுவலரும் ஆராய்ச்சி கால எல்லை முடிவில் ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. முன் ஆராய்ச்சியின் முன்னேற்றத்தை கவனிக்காது புதிய ஆராய்ச்சி முன்மொழிவொன்றிற்காக அடுத்த ஆண்டிற்கு படிகளை அங்கீகரிக்க ஆராய்ச்சிக் குழு நடவடிக்கை எடுத்திருந்தது. | 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்காக வழங்கிய ஆராய்ச்சி படிகளிற்குரிய ஆராய்ச்சி முன்மொழிவுகளின் 06 இறுதி ஆராய்ச்சி அறிக்கைகள் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளதாக. | ஆராயச்சி படிகளை பெற்றுக்கொள்ளும் அனைத்து அலுவலர்களிடம் இருந்தும் ஆராய்ச்சி அறிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | மலேசியாவின் மலயா பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு பாடநெறியொன்றை கற்பதற்காக 2014 மார்ச் 15 திகதி முதல் 2017 மார்ச் 14 திகதி வரை 36 மாத வெளிநாட்டு விடுமுறை பெற்றிருந்த அலுவலர் ஒருவரின் கோரிக்கையின் பெயரில் 2015 நவம்பர் 19 திகதி முதல் 03 ஆண்டுகள் இலங்கை மின்சக்தி தனியார் நிறுவனத்தின் தவிசாளர் பதவியில் சேவையாற்ற சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. உரிய காலத்தினுள் கற்கை நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்காத போதும் | கலாநிதி பட்ட சான்றிதழை சமர்ப்பிக்குமாறு அறிவிப்பதாக மற்றம் பாடநெறியை பூர்த்தி செய்யாவிடின் கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனை பிரகாரம் கைச்சாத்திட்ட ஒப்பந்த நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | கைச்சாத்திடப்பட்ட நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தினால் ரூபா 10,313,221 ஆன பிணைமுறி பெறுமதியை அறவிட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக பல்கலைக்கழ பட்டப் பின்படிப்பு பீடத்தின் கலாநிதி பட்டத்தை கற்பதற்காக அவ்அலுவலரிற்கு 2019 பெப்ரவரி 20 திகதி முதல் 2020 ஜுன் 13 திகதி வரை சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை அங்கீகரித்து, முன்னைய பிணைமுறி பெறுமதியையும் உள்ளடக்கி புதிய பட்டப்பின்படிப்பு பாடநெறி பிணைமுறியிற்கு உள்ளடக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2022 மே 30 திகதியளவில் அம் கலாநிதி பட்டத்தை ஏனும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | | |

### 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டினுள் ரூபா 21,000,000 செலவில் விடுதி கட்டிடத் தொகுதியினுள் மழை நீரை ஒன்றுசேர்த்து சுத்திகரிக்கும் தொகுதி ஒன்றை, வாகனம் கழுவும் கொட்டில் ஒன்று மற்றும் குப்பைகளை களஞ்சியப் படுத்துவதற்காக சிறிய கட்டிடம் ஒன்று நிர்மாணித்திருந்த போதும் அவற்றை பயன்படுத்தாது பயனற்று நிலவியதுடன் ரூபா 15,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிறிய வியாபார கட்டிடத்தை நோக்கத்திலான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாது 02 வருடகாலமாக பயனற்று நிலவியது. | அனைத்து வீட்டு உரிமையாளர்களையும் வதியச் செய்த பின்னர் கருத்திட்டத்திலுள்ள வசதிகளை பயன்படுத்துவது தொடர்பாக அவர்களை அறிவூட்டி இவ்வசதிகளை பொதுவாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக மற்றும் நீர் மற்றும் மின்சாரம் உரிய நிறுவனங்களில் இருந்து வழங்கு தாமதித்தமை, கொவிட் தொற்று காரணமாக நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் செயலிழந்து இருந்தமை போன்ற பிரச்சினைகள் காரணமாக சிறிய வியாபார கட்டிடத் தொகுதியை கடந்த காலஎல்லையினுள் குத்தகைக்கு வழங்க முடியாதிருந்தமை. | சொத்துக்களை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்கள பெறுகைகள் குழுவின் அதிகார எல்லையை மீறியுள்ள காரணத்தால், பெறுகைகளை நான்கு பகுதிகளுக்கு பிரித்து திணைக்கள பெறுகைகள் குழு பரிந்துரை மீது ரூபா 34,123,169 செலவில் வைத்திய பீடத்திற்கு விஞ்ஞானகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், 172 Desktop கணனிகளை 05 பகுதிகளாக மற்றும் 76 Laptop கணனிகளை 03 பகுதிகளாக பிரித்து திணைக்கள பெறுகைகள் குழு பரிந்துரையின் மீது ரூபா 44,983,730 செலவில் அக் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகைகள் நடைமுறையை பின்பற்றாது அல்லது அதிகார மட்டத்தை கவனிக்காது நடவடிக்கை எடுத்தலொன்று மேற்கொள்ளவில்லை என்பதாக, நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக அளவுத் திட்டம் பூர்த்தியாகும் ஒழுங்கில் பெறுகைகள் நடவடிக்கையை ஆரம்பித்து செயற்படுத்தப்பட்டதாக, பொருட்களின் விலை மிகக் குறைந்த காலத்தில் துரிதமாக அதிகரித்தல், பொருட்கள் பற்றாக்குறையாதல், கொவிட் தொற்று நிலைமை காரணமாக சந்தையில் ஏற்பட்ட இஸ்தீரமற்ற தன்மை போன்ற காரணங்கள் பெறுகைகள் நடைமுறையை தெரிவு செய்கையில் விஷேடமாக கவனிக்கப்பட்டதாக. | பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக ஆளணிக்காக வீட்டுக் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை, வடிவமைக்க மற்றும் நிர்மாணிக்கும் (Design & Built) அடிப்படையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியற்ற ரூபா 355,715,000 ஆன ஒப்பந்த பெறுமதிக்கு 2017 ஒக்டோபர் 30 திகதி நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. விலைமனு பதிவேடுகளில் உள்ளக பாதை தொகுதி மற்றும் பாதுகாப்பு வேலி தொடர்பாக மிகை மதிப்பீடு செய்துள்ளமை மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அவ்வுருப்படி பற்றி உறிய ஆய்வொன்றை மேற்கொள்ளாமை, பெறுகை ஒப்படைத்து ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் கிரயத்தினை கவனிக்காது திட்டத்தை திருத்தியுள்ளமை போன்ற விடயங்கள் காரணமாக பல்கலைக்கழகத்திற்கு | நிளத்தை சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த வேலியின் நீள அளவின் பிரகாரம் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவை கணக்கிட்டு ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்படுவதாக, விலைமனு பதிவேட்டில் விலை முன்வைப்பு உத்தேசங்களில் உள்ளக பாதையை அமைக்க மற்றும் அதற்குறிய ஏனைய விடயங்களிற்காக ரூபா 23,500,000 ஆன விலை முன்வைக்கப்பட்டுள்ளதாக மற்றும் பணம் செலுத்தும் போது பாதைகளின் நீள அளவுகளை கணக்கிடல் அவசியமில்லை ஆதலால் மொத்த தொகையையும் | ஏற்பட்டுள்ள நிதி ரீதியான நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அன்னளவாக ரூபா 20,116,000 ஆன நட்டம் ஏற்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு செய்துள்ளதாக. | |

## 3.5 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதிய நூலக கட்டிட நிர்மாணம் கட்டம் I, பெறுமதி சேர்க்கப்பட்ட வரியற்ற ரூபா 315,051,433 ஒப்பந்த பெறுமதிக்கு 24 மாதங்களில் வேலை பூர்த்தி செய்யும் நிபந்தனையின் மீது 2018 ஜனவரி 30 திகதி ஒப்பந்ததாரர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. வேலை ஆரம்ப முற்பணமாக ரூபா 63,010,286 செலுத்தியிருந்ததுடன் முற்பண பிணைமுறி 2020 பெப்ரவரி 07 திகதி காலாவதியாகியிருந்தது. எனினும் அதன் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கிடையில் ஒப்பந்தக்தாரர் நிர்மாணத்தை கைவிட்டிருந்ததுடன் வேலை பொறியியலாளரினால் இறுதியாக உறுதி செய்திருந்த வேலைப் பெறுமதி ரூபா 43,058,226 ஆனது. வேலை ஆரம்பிக்கும் முற்பணம் மற்றும் பூர்த்தி செய்த வேலைகளின் பெறுமதியாக ரூபா 83,010,286 வை ஒப்பந்ததாரருக்கு செலுத்தியிருந்ததால் ஒப்பந்ததாரரிடமிருந்து மீண்டும் அறவிட வேண்டிய பணம் ரூபா 39,952,060 ஆனது. மீளாய்வாண்டினுள் ரூபா 15,752,572 ஆன செயற்பாட்டு பிணைமுறியை பணமாக்கி பல்கலைக்கழக மீண்டெழும் செலவுகளிற்கு செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரின் கோரிக்கையின் மீது மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரமின்றி 2021 பெப்ரவரி 01 திகதி உப ஒப்பந்ததாரர் ஒருவருடன் முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு உடன்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்த பிரகாரம் 2022 பெப்ரவரி 24 திகதிக்கு முன்னர் வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டும். புதிய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 07 தினங்களுக்குள் உப ஒப்பந்ததாரரினால் சமர்பிக்க வேண்டிய ரூபா 53,442,615 ஆன முற்பண பிணைமுறி சமர்பிப்பதனை புறக்கணித்திருந்தும் மற்றும் ரூபா 15,752,572 ஆன செயற்பாட்டு பிணைமுறி சமர்பித்தல் 2022 மார்ச் 24 திகதி வரை தாமதித்திருக்கையில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காது ஒப்பந்த | உப ஒப்பந்ததாரரினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக 2021 ஜுலை 31 திகதி 23,750,499 ஆன பட்டியல் முன்வைக்கபட்டதாக, குறித்த நிறுவனத்தினால் செயற்பாட்டு பிணைமுறி சமர்பிக்கும் வரை கொடுப்பனவு செய்யாதிருக்க கட்டுப்பாட்டு சபை தீர்மானித்துள்ளதாக, அவ்வாறே எதிர்காலத்தில் முன்வைக்கும் பட்டியல்களிலிருந்து 50 சதவீத பெறுமதியை அறவிட்டு முற்பண பிணைமுறியை (Mobilization Advance) நிவர்த்தி செய்துகொள்வதாக உப ஒப்பந்ததாரருக்கு அறிவித்துள்ளதாக மற்றும் செயற்பாட்டு பிணைமுறி மேற்குறிப்பிட்ட திகதியளவில் வழங்காவிடில் உரிய தரப்பினருடன் சட்ட நடவடிக்கை எடுக்க கட்டுப்பாட்டு சபை தீர்மானித்துள்ளது. | நிலவுகின்ற பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டு கட்டிடத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முற்பண பிணைமுறி காலாவதியாக முன்னர் பணமாக்கிக் கொள்ளாமைக்கு பொறுப்புதார தரப்பினர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

காலத்தை 2023 ஜனவரி 23 திகதி வரை நீடிக்க பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 மே 15 இல் உள்ளவாறு கல்விசார் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட 461 பதவிகளிலிள் 113 பதவிகள் மற்றும் கல்விசாரா பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட 541 பதவிகளில் 149 பதவிகளும் வெற்றிடடமாக காணப்பட்டன. மீளாய்வாண்டினுள் விடுமுறை தின சம்பளம் மற்றும் மேலதிக படியாக ரூபா 17,947,941 செலுத்துவதற்கு கல்விசாரா பதவியணியில் காணப்பட்ட வெற்றிடங்களும் காரணமாக இருந்தது. | 2022 ஜனவரி மாதம் முதல் 2022 மே 19 திகதி வரை 06 பதவியணி ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, ஏனைய ஆட்சேர்ப்புகளுக்கு கிடைத்துள்ள விண்ணப்பங்களிற்காக நேர்முகப் பரீட்சை எதிர்காலத்தில் நடாத்த எதிர்பாரக்கப்படுவதாக, இலக்கம் 21/1596/304/134 கொண்ட 2021 ஆகஸ்ட் 31 திகதிய அரச செலவுகள் மீளாய்வு தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தற்போது அனைத்து ஆட்சேர்புகளும் தற்காலிகமாக இடைநிறுத்த ஆலோசனை வழங்கப்பட்டள்ளதால் தற்போது அனைத்து ஆட்சேர்புகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக. | காணப்படும் சட்ட விதிகளிற்கு இணங்கி வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |